பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

07 07 2024 **SUNDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு நரேந்திர மோடி ரஷ்யா, ஆஸ்திரியா நாடுகளுக்கு தமது மூன்று நாள் பயணத்தை நாளை தொடங்குகிறார்.

2. உலகப்புகழ் பெற்ற பூரி ஜெகந்நாதர் ரத யாத்திரையில் குடியரசுத் தலைவர் திருமதி திரெளபதி முர்மு இன்று கலந்துகொண்டார்.

3. “அன்னையின் பெயரில் மரம் வளர்ப்போம்” இயக்கத்தின்கீழ் நாடு முழுவதும் 140 கோடி மரக்கன்றுகள் நடப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு பூபேந்தர் யாதவ் தெரிவித்துள்ளார்.

4. இளநிலை நீட் தேர்வு தொடர்பான மனுக்களை உச்சநீதிமன்றம் நாளை விசாரணைக்கு எடுத்துக்கொள்கிறது.

5. தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா முதலில் பந்து வீச தீர்மானித்துள்ளது

--இனி விரிவான செய்திகள்--

<<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி, ரஷ்யா மற்றும் ஆஸ்திரியா நாடுகளுக்கு நாளை தமது மூன்று நாள் பயணத்தை தொடங்குகிறார்.

முதலில் ரஷ்ய தலைநகர் மாஸ்கோ செல்லும் பிரதமர், ரஷ்ய அதிபர் திரு விளாடிமீர் புட்டினுடன் இந்தோ – ரஷ்யா ஆண்டு உச்சிமாநாட்டில் கலந்துகொள்கிறார்.

இரு தலைவர்களும், இருநாடுகளுக்கும் இடையிலான பன்முக உறவுகள், ஒத்துழைப்பு மற்றும் மண்டல, உலகளாவிய விஷயங்கள் குறித்து ஆலோசனை நடத்தவுள்ளனர்.

தமது ரஷ்ய பயணத்தை முடித்துக்கொண்டு பிரதமர் நாளை மறுநாள் ஆஸ்திரியா செல்லவுள்ளார்.

41 ஆண்டுகளுக்கு பிறகு இந்திய பிரதமர் ஆஸ்திரியா செல்வது இதுவே முதல் முறையாகும்.

மாஸ்கோ மற்றும் வியன்னா நகரங்களில் பிரதமர் இந்திய வம்சாவளியினரை சந்தித்து பேசவுள்ளார்.

பிரதமரின் ரஷ்ய வருகை குறித்தும், 22-ஆவது இந்தியா – ரஷ்யா ஆண்டு உச்சிமாநாடு குறித்தும் தகவல் தெரிவித்துள்ள எமது செய்தியாளர், பாதுகாப்பு வர்த்தக தொடர்புகள், முதலீடுகள், எரிசக்தி ஒத்துழைப்பு, அறிவியல், தொழில்நுட்பம், கல்வி, கலாச்சாரம் உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து திரு விளாடிமீர் புட்டினுடன் பிரதமர் திரு மோடி விவாதிக்க உள்ளதாகவும் தெரிவித்தார்.

பிரிக்ஸ், ஷாங்காய் ஒத்துழைப்பு, ஜி-20, கிழக்காசிய நாடுகள் ஒத்துழைப்பு, ஐ நா சபை உள்ளிட்ட அமைப்புகளில் இருதரப்பு பங்கேற்பு குறித்தும் ரஷ்யாவுடன் இந்தியா விவாதிக்க உள்ளது.

ஆஸ்திரிய அதிபர் திரு அலெக்சாண்டர் வேனை சந்திக்கும் பிரதமர், வியன்னாவில் இருதரப்பு ஒத்துழைப்புக்கான பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

அங்கு தொழில் அதிபர்களையும் சந்தித்து பிரதமர் திரு நரேந்திர மோடி, முதலீட்டுக்கான வாய்ப்புகள் குறித்தும் பேச்சு நடத்தவுள்ளார்.

<<<<<<>>>>>>

ஒடிஷா மாநிலம் பூரி ஜெகந்நாதர் ரத யாத்திரை இன்று மாலை தொடங்கியது.

உலகப் புகழ் பெற்ற இந்த பெருவிழாவில் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கலந்துகொண்டுள்ளார்.

லட்சக்கணக்கான மக்கள் இந்த ரத யாத்திரையில் கலந்துகொண்டு பூரி ஜெகந்நாதர் ஸ்ரீ பாலபத்ரா, ஸ்ரீ சுதர்சன் ஆகியோரை தரிசனம் செய்து வழிபட்டனர்.

பாரம்பரிய முறைப்படி, தேரின் வடம் பிடித்து இழுக்கும் நிகழ்ச்சி இன்று மாலை சூரிய அஸ்தமனம் வரை நடைபெற்றது.

இந்த தேரோட்டம் நாளையும் தொடர்ந்து நடைபெறும் என்று பூரியில் உள்ள எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>>

தேசிய ஜனநாயக கூட்டணி அரசு மத்தியில் கடந்த பத்தாண்டுகளில் மேற்கொண்ட பல்வேறு திட்டங்களை அங்கீகரிக்கும் நோக்கிலேயே மக்களவைத் தேர்தலில் மூன்றாவது முறையாக மக்கள் வாய்ப்பளித்திருப்பதாக பிஜேபி மூத்த தலைவரும், மத்திய அமைச்சருமான திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று தொடங்கிய தில்லி பிஜேபி செயற்குழு கூட்டத்தில் உரையாற்றிய அவர், பிரதமர் திரு நரேந்திர மோடி

தலைமையிலான அரசு பல்வேறு நலத்திட்டங்களை கொண்டுவந்து மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தியுள்ளதாக கூறினார்.

பிரதமர் திரு மோடி தலைமையிலான அரசு மூன்றாவது முறையாக அமைந்துள்ள நிலையில் நாட்டின் வளர்ச்சியை மூன்று மடங்கு உயர்த்துவதற்கான நடவடிக்கைகளையும் முனைப்புடன் எடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த தேர்தலில் காங்கிரஸ் கட்சியை மக்கள் நிராகரித்துள்ளதாகவும் திரு பியூஷ் கோயல் கூறினார்.

<<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி அறிவித்துள்ள "அன்னையின் பெயரில் மரம் வளர்ப்போம்" என்ற இயக்கத்தின்கீழ் மத்தியப்பிரதேச மாநிலத்தில் எல்லை பாதுகாப்புப்படை கட்டுப்பாட்டில் உள்ள இந்தூர் வனப்பகுதியில் முதலமைச்சர் திரு மோகன் யாதவ் மற்றும் மத்திய வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு பூபேந்தர் யாதவ் ஆகியோர் மரக்கன்றுகளை நட்டனர்.

இந்நிகழ்ச்சியில் பேசிய முதலமைச்சர் திரு மோகன் யாதவ், இந்தூர் நகரம் பசுமை மற்றும் தூய்மை நகரங்கள் பட்டியலில் விரைவில் இணையும் என்று தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் பேசிய மத்திய வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு பூபேந்தர் யாதவ், அன்னையின் பெயரில் மரம் வளர்ப்போம் இயக்கத்தின்கீழ், 140 கோடி மரக்கன்றுகள் நடும் மாபெரும் பணி துடிப்புடன் நடைபெற்று வருவதாக கூறினார்.

இந்த இயக்கத்தில் மக்கள் ஆர்வமுடன் பங்கேற்று வருவதாகவும், இயற்கையை பாதுகாப்போம் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தி வருவதாகவும் திரு பூபேந்தர் யாதவ் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

இளநிலை நீட் தேர்வு தொடர்பான மனுக்களை உச்சநீதிமன்றம் நாளை விசாரணைக்கு எடுத்துக்கொள்கிறது.

இந்த தேர்வை மீண்டும் நடத்துவது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி 26 மனுக்களை, தலைமை நீதிபதி திரு **D Y** சந்திரசூட்,

நீதிபதிகள் திரு பர்திவாலா, திரு மனோஜ் மிஸ்ரா ஆகியோர் கொண்ட அமர்வு விசாரிக்கவுள்ளது.

நீட் தேர்வு முறைகேடுகள் தொடர்பாக தன்னிச்சையான புலனாய்வு விசாரணையை மேற்கொள்ள வேண்டும் என்பது உள்ளிட்ட மாணவர்களின் கோரிக்கைகளையும் உச்சநீதிமன்ற அமர்வு விசாரிக்கவுள்ளது.

இதனிடையே, மத்திய அரசு தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரத்தில் இந்த ஆண்டுக்கான இளநிலை நீட் தேர்வை மீண்டும் நடத்த தேவையில்லை என தெரிவித்துள்ளது.

பெரிய அளவில் தேர்வு முறைகேடுகள் நடைபெறவில்லை என்றும், புதிதாக தேர்வு நடத்தினால் இத்தேர்வில் வெற்றிபெற்றுள்ள லட்சக்கணக்கான மாணவர்களின் எதிர்காலம் பாதிக்கப்படக்கூடும் என்றும் அந்த பிரமாண பத்திரத்தில் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

2023-ஆம் ஆண்டுக்கான பட்டய கணக்காளர்களுக்கான பட்டமளிப்பு விழா நாடு முழுவதும் 13 நகரங்களில் இன்று நடைபெற்றது.

அகமதாபாத், மும்பை, பெங்களூரு, சென்னை, ஹைதராபாத் உள்ளிட்ட நகரங்களில் நடைபெற்ற இந்த பட்டமளிப்பு விழாவில், பத்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் பட்டய கணக்காளர்களாக பதிவு செய்யப்பட்டு அவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

சென்னையில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில், இந்திய பட்டய கணக்காயர் நிறுவனத்தின் ஒருங்கிணைப்பாளர்கள் திரு சி ஏ ராஜேந்திரகுமார், திருமதி ஸ்ரீபிரியா குமார், உள்ளிட்டோர் கலந்துகொண்டு சான்றிதழ்களை புதிய பட்டய கணக்காளர்களுக்கு வழங்கினர்.

சான்றிதழ்களை வழங்கியபின் எமது செய்திப்பிரிவுக்கு பேட்டியளித்த பட்டமளிப்பு விழா ஒருங்கிணைப்பாளர் திருமதி ஸ்ரீபிரியா குமார், நாட்டின் வளர்ச்சியில் பட்டய கணக்காளர்கள் முக்கிய பங்காற்றுவதாக கூறினார்.

தற்போது அதிக அளவில் பெண்கள் பட்டய கணக்காளர்களாக தேர்ச்சி பெற்று வருவதாக அவர் குறிப்பிட்டார்.

2047-ல் வளர்ச்சி பெற்ற நாடாக இந்தியாவை உருவாக்கும் முயற்சியில் புதிதாக வந்துள்ள பட்டய கணக்காளர்கள் சிறப்பாக பணியாற்ற வேண்டும் என்றும் திருமதி ஸ்ரீபிரியா குமார் கேட்டுக்கொண்டார்.

**<<<<<<>>>>>>**

ஜம்மு காஷ்மீரில் பாதுகாப்பு படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் 6 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

குல்காம் மாவட்டத்திற்கு உட்பட்ட **Frisal Chinnigam** மற்றும் **Modergam** பகுதியில் பாதுகாப்புப் படையினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டபோது, இந்த தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டதாக ஜம்மு காஷ்மீர் காவல்துறை தலைவர் திரு ஆர் ஆர் **Swain** தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கையின்போது படுகாயமடைந்த பாதுகாப்புப்படையை சேர்ந்த இரண்டு வீரர்கள் வீர மரணமடைந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இதனிடையே, சட்டீஸ்கரில் பாதுகாப்புப்படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது ஐந்து மாவோயிஸ்ட் தீவிரவாதிகளை கைது செய்துள்ளனர்.

சுக்மா மாவட்டத்தில் நடத்தப்பட்ட இந்த தேடுதல் நடவடிக்கையில் மாவோயிஸ்டுகளிடமிருந்து டிபன்பாக்ஸ் வெடிகுண்டு, டெட்டனேட்டர்கள் மற்றும் வெடிப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பாதுகாப்புப்படையினர் தெரிவித்தனர்.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா முதலில் பந்து வீச தீர்மானித்துள்ளது.

சென்னையில் நடைபெற்றுவரும் இப்போட்டி தற்போது மழை காரணமாக தாமதமாகியுள்ளது.

----------

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டிவென்டி - டிவென்டி கிரிக்கெட் போட்டியில் 235 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பேட் செய்துவரும் ஜிம்பாப்வே அணி சற்றுமுன்வரை 13 ஓவரில் 7 விக்கெட் இழப்பிற்கு 91 ரன் எடுத்துள்ளது.

**Harare-**யில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 2 விக்கெட் இழப்பிற்கு 234 ரன் எடுத்தது.

அதிகபட்சமாக அபிஷேக் சர்மா சதம் அடித்தார்.

ருதுராஜ் கெயிக்வாட் 77 ரன் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

**<<<<<<END>>>>>>**